செ.வெ. 719 நாள் 31-08-2008

# தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தில் மகளிர் மேம்பாடு

மக்கள் தொகைப் பெருக்கத்தால் நமது வளமான காடுகள் தரமிழந்து விட்டன. இதனால் அதனருகில் வாழும் மக்கள் மிகவும் நலிந்து ஏழ்மை நிலையில் உள்ளனர். இத்தகைய காடுகளை தரமுயர்த்தவும், ஏழை எளிய மக்களின் துயர்துடைக்கவும் 'தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்' என்ற ஒரு மாபெரும் மக்கள் திட்டத்தினை 1997-98 முதல் தமிழகத்தில் நடைமுறைப்படுத்திய பெருமை கலைஞர் அரசையே சேரும் என்பதனை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏழை மக்களின், குறிப்பாக மகளிர் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள கலைஞர் அரசால் தொலைநோக்குடன் தீட்டப்பட்ட இத்திட்டம் மிகச்சிறந்த முன்னுதாரணமான திட்டமாக இருப்பதில் வியப்பேதுமில்லை என்பதை குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். காடுகளை வளர்ப்பது மட்டுமின்றி அதை நம்பி வாழும் மக்களின் நலனையும் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வருகிறது நம் கலைஞர் அரசு என்றால் அது மிகையாகாது. காடுவளர்ப்புப் பணிகளை ஒரு மக்கள் இயக்கமாகவே மாற்றி கூட்டுவன நிர்வாகத்தினை மிகச்சிறந்த முறையில் தமிழ்நாடு வனத்துறை நடைமுறைப்படுத்தி வருகிறது என்பதை பேருவுவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் மக்களின் பங்கேற்புடன் மக்களுக்காகவே நிறைவேற்றப்படுவதால் தான் இத்தகைய விழாக்களை நடத்தி திட்டப்பயன்களை மக்களுக்கு நேரடியாக வழங்கி வருகிறோம். பெருவாரியான மகளிருக்கு சிறுகடன் வழங்கும் இந்நிகழ்ச்சியில் பங்கு கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியினை அளிக்கிறது.

இச்சீரிய திட்டத்தினால் தமிழகத்தில் இதுவரை 2167 கிராமங்கள் பயனடைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல் 6 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இத்திட்டத்தில் பங்கேற்று வருகின்றனர். தமிழ்நாடு காடுவளர்ப்புத் திட்ட கிராமங்களில் 6,638 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டு இவற்றில் 99,076 மகளிர் பயடைந்துள்ளனர். 99 பெண்கள் கிராம வனக்குழுக்களுக்கு தலைமை ஏற்றுள்ளனர். திட்ட கிராமங்களில் பயனாளிகளுக்கு ரூ. 69.82 கோடி சிறுகடனாக வழங்கப் பட்டுள்ளது.

தற்போதைய கலைஞர் அரசு பதவியேற்றவுடன் இத்திட்டத்தில் மகளிர் மேம்பாட்டிற்கென தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 2274 சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 32,083 மகளிர் பயனடைந்துள்ளனர். பயனாளிகளுக்கு ரூ. 10.63 கோடி சிறுகடனாக வழங்கப்பட்டுள்ளது.

மகளிரின் பொருளாதார மேம்பாட்டில் இந்த அரசு மிகவும் அக்கறை செலுத்தி வருகிறது என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

இன்று நடைபெறும் இந்த இனிய விழாவில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த 125 தமிழ்நாடு காடுவளர்ப்பு திட்ட கிராமங்களில் இயங்கி வரும் 398 மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள 5621 மகளிர் உறுப்பினர்களுக்கு ரூ. 1,03,62,528 சிறுகடனாக வழங்கப்படும் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் தமிழக வனங்களை ஒட்டியுள்ள கிராமங்களில் வாழும் ஏழைப் பெண்களின் பொருளாதார நிலை உயர்வடையும் என்பதையும் இத்தருணத்தில் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். காடுகளின் வளத்தை நல்லமுறையில் பாதுகாத்து தரமான மாசற்ற சூழலில் நம் மாநில மக்கள் நல்வாழ்வுடன் வாழ அனைத்து முயற்சிகளையும் கலைஞர் அரசு மேற்கொண்டு வருகிறது என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே காடுகளை பாதுகாக்க மக்கள் தொடர்ந்து தங்கள் நல்ல ஒத்துழைப்பினைத் வழங்குமாறு உங்களனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

## Buffer Activities to be carried out during 2008-09

| | Income Generation Activity | Community Development | Total |
|---|---|---|---|
| | Rs. In lakhs. | | |
| Buffer Zone Activities(BZA) - I Year Activities(2008-09) | 316.61 | 155.94 | 472.55 |
| Buffer Zone Activities(BZA) - II Year Activities(2007-08) | 467.72 | 230.37 | 698.09 |
| Buffer Zone Activities(BZA) - III Year Activities(2006-07) | 399.36 | 196.70 | 596.06 |
| Buffer Zone Activities(BZA) - IV Year Activities(2005-06) | 172.69 | 85.06 | 257.75 |
| **Total** | **1356.38** | **668.07** | **2024.45** |

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9